

# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

**2018 ஜூன் ~ ஜூலை ~ ஆகஸ்ட் வெளியீடு**

## நீதிமான் பனையைப்போல் செழித்து வளருவான்.

சங்கீதம் 92:12

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். சங்கீதம் 14:1

**மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. மத்தேயு 9:2**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என் வாழ்க்கையில் வருவதற்கு முன்பாக நான் ஒரு நாஸ்திகனாய் வாழ்ந்தேன். “தேவன் இல்லை” என்று சொல்லிக்கொண்டே வந்தேன். தேவனை நம்புகிறவர்களையும் கிண்டல் செய்து கொண்டிருந்தேன். ஆனால், ஒரு நாளில் தேவனுடைய சத்தத்தை மிகவும் தெளிவாகக் கேட்டேன். “ என் மகனே! உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன” என்று தேவன் என்னுடன் சொல்வதை 1929 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி கேட்டேன். இவ்வாறே நான் தேவனுடன் நடக்க ஆரம்பித்தேன். தேவனுடைய ஜீவன் எனக்குள் வந்தவுடன் மூன்றுவிதமான மாறுதல்களை என் ஆவியிலும், ஆன்மாவிலும், சரீரத்திலும் பெற்றேன்.

புத்துயிர் பெற்ற ஆவியையும், புத்துணர்வு பெற்ற ஆன்மாவையும், சுத்திகரிக்கப்பட்ட சரீரத்தையும் பெற்றேன். இதைத் தொடர்ந்து 1930 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பத்திலேயே ஆதியாகமத்திலிருந்து வேதம் வாசிக்கத் தொடங்கி விட்டேன். “தேவன் சொன்னார்” எனும் பதம் ஒரே அதிகாரத்தில் திரும்ப திரும்ப வருகிறதைக் கவனித்தேன். தொடர்ந்தும் வாசித்து வருகையில் 500 தடவை இவ்வாறு கூறப்பட்டிருப்பதை கண்டுபிடித்தேன். “தேவன் சொல்லுகிறார், கர்த்தர் பேசுகிறார்” என்று அறிந்தவுடன் “ஓ! என் தேவனே! என்னோடு பேசும். நான் உம்முடைய சத்தத்தைக் கேட்க ஆவலுள்ளவனாய் இருக்கிறேன். உமது சத்தத்தைக் கேட்பதைத் தவிர வேறெந்த வாஞ்சையும், நாட்டமும் எனக்கில்லை. வேறே அனுபவங்களை பெற நான் விரும்பவும் இல்லை. நாளுக்கு நாள் நீர் என்னோடே பேசி நீர் என்னை வழிநடத்துவதே என் இதயப்பூர்வமான வாஞ்சையாக இருக்கிறது.” என்று சொன்னேன்.

தினந்தோறும் அவர் சத்தத்திற்காக தவமிருப்பேன். ஆதலால், நீயும் அவருடைய சத்தத்தைக் கேட்கவும், அவர் கற்றுக் கொடுக்கும் பாடங்களை அறிந்து கொள்ளவும் வேண்டுமென்று விரும்புகிறேன்.

அனுதின தேவ இரகசியங்கள் தியான பகுதியிலிருந்து...

- Bro. Bakth Singh -

# மோசே பார்த்தவை

மனிதர்கள் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ளும் முறைகள் ஒருவர்க்கொருவர் வேறுபட்டவை. சிலர் காதால் கேட்பதை மனதில் வைத்துக்கொள்ளும் திறன் கொண்டவர்கள். சிலர் கண்ணால் பார்த்து கற்றுக்கொள்பவர்கள். வேதத்தில் நாம் காணும் மோசே என்பவன் பார்ப்பதில் ஆர்வம் மிகுந்தவன். அவன் கண்டவற்றை நாமும் காண்போமா?

**சுமை சுமக்கிறதைப் பார்த்து...**

மோசே பெரியவனான காலத்தில், அவன் தன் சகோதரரிடத்தில் போய், அவர்கள் சுமைசுமக்கிறதைப் பார்த்து, தன் சகோதரராகிய எபிரேயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக் கண்டு, அங்கும் இங்கும் பார்த்து, ஒருவனும் இல்லை என்று அறிந்து, எகிப்தியனை வெட்டி, அவனை மணலிலே புதைத்துப்போட்டான் என யாத்திராகமம் 2:11,12ல் நாம் காண்கிறோம்.

இங்கே, தன் சகோதரர் சுமை சுமக்கிறதை அவன் காண்கிறான்; தன் சகோதரரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக் காண்கிறான்; தன்னை சுற்றி யாரும் இருக்கிறார்களா என்று பார்க்கிறான். இப்படியாக மோசே பார்ப்பதில் ஆர்வம் காட்டுவதை நாம் அவதானிக்கலாம்.

இந்த சம்பவத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடம் என்ன? மோசே தன் சகோதரர்கள் சுமை சுமக்கிறதைப் பார்த்தது போல நாமும் நம்முடைய சகோதரர் சுமக்கும் சுமைகளை, அவர்களது பாரங்களைப் பார்க்க வேண்டும்.

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே இயேசு கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் என்று கலாத்தியர் 6:2லும் அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக என்று பிலிப்பியர் 2:4லும் நமக்கு புத்தி சொல்லப்படுகிறது.

அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக என்பதின் அர்த்தமாவது, நாம் நம்முடைய பாரங்கள் தேவைகள் இவற்றைக் குறித்து மட்டுமே கரிசனைக் கொண்டு அவற்றை பூர்த்தி செய்து கொள்வதற்காக மட்டுமே நம்முடைய நேரத்தையும் சிரத்தையையும் திறமைகளையும் நாம் கொண்ட அனைத்தையும் செலவிட்டுக்கொண்டு கவலைப்பட்டுக்கொண்டு இருக்காமல் நம் சகோதரர் கொண்டுள்ள பாரங்களையும் தேவைகளையும் கூட நாம் கருத்தில் கொண்டு அவற்றை நிவிர்த்தி செய்வதற்கு நம்மால் இயன்ற சகல விதத்திலும் செயற்பட வேண்டும் என்பதேயாகும்.

இதையே தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இரண்டாவது பிரதான கற்பனையாக உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று கூறினார்.

மோசே தன் சகோதரர் சுமக்கும் சுமைகளைக் கண்டமை ஓர் நல்ல செயல் எனினும் அதைத் தீர்ப்பதற்கு அவன் கையாண்ட முறை தவறானது. அவன் அவனுடைய சுய புத்தியின் படி செயற்பட்டான். அதன் விளைவாக நாற்பது வருடங்கள் எனும் நீண்டதோர் காலமாக தேவனால் பல்வேறு பயிற்சிகளுக்கூடாக செல்ல நேர்ந்தது. மந்தை மேய்ப்பதின் மூலம் அறிவில்லா ஆடுகளை சரியான வழியில் நடத்-

தவும் பராமரிக்கவும் பாதுகாக்கவும் கற்றுக்கொண்டான். இத்தகையதோர் கடுமையான பயிற்சியின் பின்பே தேவனுடைய அழைப்பு அவனிடம் வந்தது. தன் சுயபுத்தியினால் ஒரு எகிப்தியனைக் கொன்று பயந்தோடிய மோசே தேவனுடைய வழிகாட்டலின் படி நடந்து கொண்ட போது முழு எகிப்திய இராணுவத்தையும் சிவந்த சமுத்திரத்தில் புதைத்துப் போட்டான். அதே போல தான் நாமும் நம்முடைய சுய அறிவின் படி நம் சகோதரர்களின் பாரங்களுக்கு தீர்வுகள் வழங்க நாம் முற்படுவோமாயின் அதன் விளைவுகள் நன்மையாயிராது. மாறாக, நாம் காணும் பாரங்களுக்கு தீர்வுகளை தேவனிடம் கேட்போமாயின், தேவன் சொல்வது போல் செய்வோமாயின் விளைவுகள் நன்மையானதாகவும் நாம் எதிர்பார்த்-ததை விட அதிகமானதாயும் அமையும்.

தன் சகோதர்கள் சுமை சுமப்பதைக் கண்டு அதற்கு தீர்வு வழங்க வேண்டும் என விரும்பிய அதே மோசேயையே தான் தேவன் அவர்களின் சுமையில் இருந்து அவர்களை விடுவிப்பதற்காக பயன்படுத்தினார். ஆனால், அது அவரு-டைய வழியில் செய்யப்பட வேண்டும்.

நாமும் நம் சகோதர்களுடைய பாரங்களைக் காணவும் அதற்கான தீர்வை தேவனிடம் கேட்டு பெற்றுக்-கொள்ளவும் பிரயாசப்படுவோம்.

சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்-கடவது (எபிரேயர் 13:1).

மேலும், மோசே கண்ட ஏனையவற்றை குறித்து இனிவரும் இதழ்களில் கற்றுக்-கொள்வோம்....



## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

## ரூத்தின் சரித்திரம்

| | | |
|---|---|---|
| அதிகாரங்கள் | : | 4 |
| வசனங்கள் | : | 85 |
| எழுத்தாளர் | : | அறியப்படவில்லை |
| காலம் | : | அறியப்படவில்லை |

### சிறப்பம்சங்கள்

- தீர்க்கதரிசனங்கள் இல்லாத முதலாம் புத்தகம்
- ஓர் பெண்ணின் பெயரால் பெயரிடப்பட்டிருக்கும் இரு புத்தகங்களில் முதலாவது
- துக்கமான ஆரம்பம், சந்தோஷமான முடிவு

### அதிகாரப்பகுப்பு

- எல்லாவற்றையும் இழக்கும் நகோமி (1:1-5)
- மோவாபுக்கு திரும்பி வரும் நகோமி (1:6-22)
- அறுவடையின் போது ரூத் மற்றும் போவாசின் சந்திப்பு (2)
- போரடிக்கும் களத்தில் போவாசை சந்திக்க செல்லும் ரூத் (3)
- போவாஸ், ரூத் ஆகியோரின் திருமண ஆயத்தம் (4:1-12)
- நிறைவாக பெற்றுக்கொள்ளும் நகோமி (4:13-17)
- தாவீதின் வம்சாவழி (4:18-22)

# ஆண்டவராகிய ஊழியன்

என்னுடைய நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்று கூறிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன் ஊழியத்தின் மூலம் நமக்கு விட்டுச்சென்றுள்ள ஓர் ஊழியக்காரனின் அம்சங்களைக் கற்றுக்கொள்வோம்.

### பரிசுத்த ஊழியன்

"நீர் அபிஷேகம்பண்ணின உமது பரிசுத்த பிள்ளையாகிய இயேசு" என்று அப்போஸ்தலர் 4:28ல் கூறப்பட்டுள்ளது (மூல பாஷையில் பிள்ளை என்று அல்ல ஊழியன் என்றே இருந்தது). மேலும், எபிரேயர் 4:15ல் "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவம் இல்லாதவராயிருக்கிறார்" என்றும் எழுதப்பட்டுள்ளது.

### சாந்தமும் மனத்தாழ்மையுமான ஊழியன்

"இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே. என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன். அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். அவர் கூக்குரலிடவுமாட்டார். தமது சத்தத்தை உயர்த்தவும் அதை வீதியிலே கேட்கப்பண்ணவுமாட்டார். அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்." ஏசாயா 421-3

### பாடனுபவித்த ஊழியன்

இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார். அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை. அவரைப் பார்க்கும் போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாய் இருந்தார். அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம். அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார். நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம்.. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசாயா 53.

### தேவனுக்கு பிரியமான ஊழியன்

இதோ, நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன், என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன். மத்தேயு 12:18

### நீதிபரராகிய ஊழியன்

என் தாசனாகிய நீதிபரர் தம்மை பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். ஏசாயா 53:11. எபி 12:2, ரோமர் 4:25, 5:9, 3:24

### தன் ஜீவனை கொடுத்த ஊழியன்

மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். மத்தேயு 20:28

### உயிர்த்தெழுந்த மகா உன்னதமான ஊழியன்

இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார், அவர் உயர்த்தப்பட்டு, மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார். ஏசாயா 52: 13 எபேசியர் 1:19-21, 4:9,10 பிலிப்பியர் 2:9.

- Sis. Anne Jayasundara -

# இரகசிய உயில்

ஒரு பணக்காரத் தகப்பனும், மகனும் புகழ்பெற்ற ஓவியர்கள் வரைந்த ஓவியங்களை வாங்கி சேர்ப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். அக்காலத்தில் வியட்நாம் போர் நடைபெறவே மகன் அந்தப்போருக்கு போக நேர்ந்தது. அவன் அந்த போரில் சிறப்பாக பங்கேற்று தன் சக போர் வீரர்களில் அநேகரைக் காப்பாற்றினான். அவ்வாறு ஒரு வீரனைக் காப்பாற்றும் போது, அவனுடைய நெஞ்சிலே குண்டு பாயவே, அந்த இடத்திலேயே மகன் இறந்தான். அச்செய்தியைக் கேள்விப்பட்ட தகப்பனும் தனது ஒரே மகன் இறந்த துக்கத்துடனேயே தன் நாட்களைக் கழித்து வந்தார்.

ஒரு மாதத்திற்கு பிறகு அவரது வீட்டுக்கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்த போது, ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான். அவன் "ஐயா! உங்கள் மகன் காப்பாற்றிய போர் வீரர்களில் நானும் ஒருவன். உங்கள் மகன் அடிக்கடி உங்களின் சிறப்பைப் பற்றி பேசுவான். நீங்கள் ஓவியங்கள் சேர்ப்பில் அலாதி பிரியர் என்றும் சொன்னான். ஐயா! நான் ஒரு பெரிய ஓவியன் அல்ல. ஆனாலும், உங்கள் மகனை வரைந்துள்ளேன். தயவுசெய்து, ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வேண்டி நின்றான். தகப்பன் எவ்வளவு பணம் வேண்டும் என கேட்டதற்கு, வேண்டாம், வேண்டாம் உங்கள் மகனால் தான் இன்று உயிரோடு உங்கள் முன் நிற்கிறேன் என்று கூறி சித்திரத்தை கையளித்து விடைபெற்றுச் சென்றான்.

அம்மனிதர் அந்தப்படத்தை ஒரு பொக்கிஷமாக கருதி சுவரில் தொங்க விட்டார். வீட்டிற்கு வரும் அனைவருக்கும் அப்படத்தைக் காண்பிப்பார்.

சில காலங்களுக்கு பிறகு அத்தகப்பனாரின் உயிரும் பிரிந்தது. அவர் விலைகொடுத்து வாங்கிய ஓவியங்களை மற்றும் அவரின் ஏனைய உடைமைகளை அவருடைய வழக்கறிஞர் ஏலம் விட அறிவித்தார். புகழ் பெற்ற ஓவியங்களாக அவை இருந்தபடியால், அநேகர் அவைகளை வாங்குவதற்கு கூடினர்

மகனின் அப்படத்தைக் காட்டி "யார் இதை வாங்குவதற்கு முன் வருகிறீர்கள்? என்றார் வழக்கறிஞர். அங்கு அமைதி நிலவியது. திரும்பவும் அவர், "யார் வாங்குறீர்கள்? 200 டொலர் அல்லது 300 டொலர் எவ்வளவு? சொல்லுங்கள் என வழக்கறிஞர் அறைகூவல் விடுத்தார். வருகை தந்தவர்களில் ஒருவர் "நாங்கள் அவரின் மகனின் ஓவித்தை வாங்க வரவில்லை. மற்றைய ஓவியங்ளை ஏலமிடுங்கள்" என்றார். ஆனால், வழக்கறிஞரோ "அவருடைய மகனின் படத்தை யார் வாங்குவதற்கு முன் வருகிறீர்கள்? என கேட்டுக் கொண்டேயிருந்தார்.

கடைசியில், பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. அவர் அவ்வீட்டில் தோட்டக்காரராய் இருந்தவர். அவர் 10 டொலர் எனக் குரல் கொடுத்தார். உடனே, வழக்கறிஞர் யாராவது 20 டொலர் என்று சத்தமிட்டு கேட்டார். யாருமே முன் வரவில்லை. எங்கும் ஒரே அமைதி. வழக்கறிஞர் "10 டொலர் ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம்" என்று ஏலமிட்டு அந்தப்படத்தை அத்தோட்டக்காரனுக்கு கொடுத்தார்.

வந்திருந்தவர்கள் பொறுமையை இழந்து "மற்றைய ஓவியங்களுக்கும் பொருட்களுக்கும் சீக்கிரம் ஏலத்தை ஆரம்பியுங்கள்" என்று கத்தினார்கள். வழக்கறிஞரோ: "மன்னிக்கவும் ஏலம் முடிந்துவிட்டது" என்றார். "ஏன்?" என்ற அவர்களது கோபத்துடனான கேள்விக்கு, "உயிலின் இரகசியமானது, அவருடைய மகனின் ஓவியத்தை யார் விலை கொடுத்து வாங்குகிறார்களோ அவர்களுக்கே இவ்வீடும், சொத்துக்களும் உரித்தாகும் என்பதேயாகும்" என்றார்

**குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.**
**1 யோவான் 5:12**

# அழகு சாதனமற்ற அழகு

மனிதனைப்படைத்தவர் தேவன். மனிதன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான் என பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. (ஆதியாகமம் 1:26,27). மனிதர்களை தேவன் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாக ஒவ்வொரு முக ரூபத்தில் உண்டாக்கினார். சரும நிறம், உடல் பருமன் போன்றவை மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றன. இவை யாவும் தேவனின் படைப்பாகும். மனிதனோ தன் தோற்றத்தை அழகுபடுத்திக்கொள்ள வெவ்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறான். எனினும் அழகு சாதன பொருட்கள் எதுவுமில்லாமலேயே நம்மை அழகுப்படுத்திக்கொள்ள ஓர் வழியுண்டு. இதைப்பற்றி வேதாகமம் பின்வருமாறு கூறுகிறது:

"மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும்" (நீதிமொழிகள் 15:13).
அகத்தில் சந்தோஷமிருப்பின் முகத்தில் அழகுள்ளவர்களாகலாம்.

நம் வாழ்வின் நன்மைகளினால் மட்டுமே நாம் சந்தோஷமடைகிறோம் என கூறிவிட முடியாது. நன்மைகள் கிடைக்கும் போது எவருமே சந்தோஷப்படுவர். ஆனால், வாழ்விலும் தாழ்விலும், நன்மையிலும் தீமையிலும் உங்களால் சந்தோஷப்பட முடியுமா? நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்பவராயின் அவ்வாறு சந்தோஷப்பட முடியும்.

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28). மேற்குறிப்பிட்ட வசனத்தில் "சகலமும்" எனக்கூறப்பட்டுள்ளது. அதாவது, இன்பம், துன்பம், நன்மை, தீமை யாவுமே நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. ஆகவே, ஓர் கிறிஸ்தவ விசுவாசி சந்தோஷமாய் இருக்கலாம். மனமலர்ச்சி இருப்பின் முகமலர்ச்சியும் இருக்கும்.

ஓர் விசுவாசி சந்தோஷமாயிருக்க வேண்டிய ஏழு காரணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

1. அவருடைய இரட்சிப்புக்காக சந்தோஷப்படுதல் "இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம்" (ஏசாயா 25:9, சங்கீதம் 13:5, சங்கீதம் 35:9)

இரட்சிப்பு என்றால் என்ன? ஆண்டவராகிய இயேசு என் பாவங்களை தம்முடைய சரீரத்திலே சுமந்து சிலுவையிலே இறந்ததால் என் பாவங்களுக்கு மன்னிப்பு உண்டாயிருக்கிறது என விசுவாசிப்பதன் மூலம் பாவத்தின் சம்பளமாகிய நித்திய மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுதலாகும். விசுவாசமாவது யாது? விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபிரேயர் 11:1).

2. அவரது கிருபையிலே சந்தோமாய் இருத்தல் "உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன்." (சங்கீதம் 31:7)

கிருபை என்றால் என்ன? பெற்றுக்கொள்ள நமக்கு தகுதியில்லாதவற்றை கூட தேவன் நமக்குப் பெற்றுத்தருவதே கிருபையாகும். பாவி மனிதன் மரணத்துக்கு பாத்திரவானாயிருந்தாலும் அவன் மன்னிப்புப்பெற கொஞ்சமும் தகுதியற்றவனாயிருந்தாலும் தேவன் தம்முடைய கிருபையினாலே மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் தந்திருக்கிறார். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவான் 1:9). "பாவத்தின் சம்பளம் மரணம். தேவனின் கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்." (ரோமர் 6:23).

3. அவருடைய சிருஷ்டிப்பிலே சந்தோஷப்படுதல்

"நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்" (ஏசாயா 65:18).

இந்த உலகத்தையும் இவ்வுலகில் உள்ள யாவையும் தேவன் படைத்திருப்பது மனிதனுக்கு மிக முக்கியமாகும். ஏனென்றால், தேவன் யாவையும் படைத்து மனிதனிடம் ஒப்புக்கொடுத்தது அவனது பிரயோஜனத்திற்காகவேயாகும்.

4. கர்த்தர் நமக்குச் செய்துள்ள பெரிய காரியங்களுக்கா சந்தோஷப்படுதல். (சங்கீதம் 126:3)

- நாம் தேவனுடைய பிள்ளைகளாகும் படிக்கு நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார் (யோவான் 1:12)

- அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். (எபேசியர் 1:3)

- நமக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது (எபேசியர் 4:7)

- தேவனால் நமக்கு வரம் அருளப்பட்டிருக்கிறது (1 கொரிந்தியர் 7:7)

- நம்மை பரிசுத்த ஆசாரியக்கூட்டமாக்கியிருக்கிறார் (1 பேதுரு 2:5)

- விசுவாசத்தினாலே நாம் வேண்டிக்கொள்பவற்றைப் பெற்றுக்கொள்ள செய்திருக்கிறார் (மாற்கு 11:24)

- கிறிஸ்துவுடனே கூட உட்காரச்செய்திருக்கிறார் (எபேசியர் 2:7)

5. அவருடைய இரண்டாம் வருகையின் சந்தோஷம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாளானது, ஆண்டவர் இயேசுவை சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டிருக்கும் அனைவருக்கும் மிகுந்த சந்தோஷத்தைத் தரும் நாளாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் அவருடைய வருகையி நம்பிக்கையே இவ்வுலகில் எவ்வித நம்பிக்கையும் இல்லாமலிருக்கும் நிலையிலும் நமக்கு நம்பிக்கை தந்து நம்மை சந்தோஷிப்பிக்கும் மகிமையின் நம்பிக்கையாகும்.

6. அவருடைய நியாயத்தீரப்பிலே சந்தோஷம்

"உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம் சீயோன் பர்வதம் மகிழ்வதாக, யூதாவின் குமாரத்திகள் களிகூருவார்களாக." (சங்கீதம் 48:11)

கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும், உண்மையின்படி என்னை உபத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன். (சங்கீதம் 119:75)

7. அவருடைய ஆட்சியின் மீது சந்தோஷம்

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார். பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக்கடவது. (சங்கீதம் 97:1)

- Sis. Nayomi Sandamali -

**கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். (பிலிப்பியர் 4:4)**

# ஜெயங்கொள்ளுகிறவனெவனோ...



ஜெயங்கொள்ளுதலைப்பற்றி சபைகளுக்கு அதிகமாய் நாம் புத்தி சொல்ல வேண்டிய காலமாய் இது இருக்கிறது. ஏனென்றால், ரோமர் 13:11ன் படி, "நாம் விசுவாசிகளான-போது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது". அதாவது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மறுவருகையின் நாளானது எபிரேயர் 10:25படி சமீபித்து வருகிறது.

வெளிப்படுத்தல் 2ம், 3ம் அதிகாரங்-களில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சின்ன ஆசியாவிலிருந்த 7 சபைகளுக்கு அனுப்பிய 7 கடிதங்களிலும், ஜெயங்-கொள்பவனைப்பற்றியும் ஜெயங்கொள்-பவன் பெறுபவை எவை எனவும் தெளிவாகப் பேசியுள்ளார். அக்கடிதங்-களுள் முதலாவது கடிதமாகிய எபேசுவிலிருந்த சபைக்கு எழுதிய கடிதத்தின் முடிவிலே, ஜெயங்கொள் பவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கும் ஜீவ விருட்சத்தின் கனியைப்புசிக்கக்கொடுப்பேன் எனக் கூறியுள்ளார். "ஜீவ விருட்சம்" என்ற உடனேயே நம் ஞாபகத்திற்கு வருவது ஏதேன் தோட்டத்தில் தான்.

ஆம், தேவன் படைத்த அந்த அழகிய தோட்டத்திலே, தேவன் முதன்-முதலில் படைத்த ஆதாம், ஏவாள் எனும் மனிதர்கள் ராஜா ராணியாக வாழ்ந்து வந்தனர். அந்த இரம்மியமான தோட்டத்திலே பலவகையான இனிய கனிமரங்களுடன் சேர்ந்து விசேடமான வேறு இரு மரங்களும் இருந்தன. ஒரு மரத்துக்கு "நன்மை தீமை அறியத்-தக்க மரம்" எனவும் மற்றையதற்கு "ஜீவ விருட்சம்" எனவும் பெயர்.

தேவன் ஆதாமைப்பார்த்து, "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்-தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க-வேண்டாம் அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என ஆதியாகமம் 2:16,17ல் எச்சரித்தாலும் ஜீவ விருட்சத்-தின் கனியைப் புசிக்க வேண்டாம் என தடுக்கவில்லை.

"நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்." என தேவன் சொன்ன-தினாலே ஜீவ விருட்சத்தின் கனியை அவர்கள் புசிப்பதற்கான பூரண அனு-மதியையும் தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். ஆனால், மாறாக அவர்கள் அந்த ஜீவ விருட்சத்தின் கனியைப்புசிக்காமல் தேவன் புசிக்க வேண்டாம் எனக்கூறிய மரத்தின் கனி-யைப் புசித்தார்கள். அவர்களுடைய அந்தக் கீழ்ப்படியாமையினாலேயே அவர்களுக்கும் அவர்கள் மூலமாய் இவ்வுலகின் பிறந்த அனைத்து மனிதர்களுக்கும் பாவமும் மரணமும் வந்தது. நமக்கும் தேவனுக்கும் இடையே பிரிவு ஏற்பட்டது. நம்மால் தேவனிடம் சேர முடியாமல் போனது.

ஒருவேளை, அவர்கள் நன்மை தீமை அறியத்தக்க மரத்திலிருந்து உண்ணாமல், ஜீவ விருட்சத்தின் கனியைப்புசித்திருந்தால் என்ன நடந்திருக்கும்? மனிதன் ஒரு போதும் சாகாமல் என்றைக்கும் உயிரோடிருந்திருப்பான். அது தான் ஜீவ விருட்சத்தின் சிறப்பு. ஜீவன் என்றால் உயிர். ஆகவே தான், மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை புசித்த உடனேயே, ரோமர் 6:23ல் வேதாகமம் கூறுவது போல பாவத்தின் சம்பளமாகிய மரணம் மனிதனைப் பற்றிக்கொண்டது. எனவே என்றென்றைக்கும் உயிரோடிருக்கும் உரிமையை மனிதன் இழந்துவிட்டான் எனவே தான், ஆதியாகமம் 3:22லே தேவன், மனிதன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் எனச்சொல்லி அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக்காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேரூபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார்.

இப்படியாக மனிதனுக்கு தடைசெய்த அந்த ஜீவ விருட்சத்தின் கனியையே தான், அதே தேவன் இங்கே ஜெயங்கொள்பவனுக்குத் தருவேன் என வாக்களிக்கிறார். அதின் கருத்து இனி மரணம் அவனை எதுவும் செய்ய இயலாது என்பதேயாகும்.

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே என ரோமர் 8:2 நமக்கு நம்முடைய இரட்சிப்பின் விளைவை விரிவாக ஞாபகப்படுத்துகிறது.

எந்த பாவம் நம்மை தேவனை விட்டுப் பிரித்ததோ, அதே பாவத்தின் தண்டனையிலிருந்து நம்மை மீட்பதற்காக அதே தேவன் நம் மீது கொண்ட தமது அன்பினாலே மனிதனாக வந்து மரணத்தைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு நம்மை அந்த மரணப்பிரமாணத்தில் இருந்து விடுதலையாக்கி நம்மைத் தம்மோடு சேர்த்துக்கொண்டார். மனிதன் கீழ்ப்படியாததினால் செய்த பாவத்துக்காக, ஆண்டவர் இயேசு மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவரானார் (பிலிப்பியர் 2:8).

இன்று எவனொருவன், தன் பாவங்களை உணர்ந்து தன் பாவங்களின் தண்டனையைத்தான் ஆண்டவர் இயேசு சிலுவையிலே செலுத்தினார் என தன் முழு உள்ளத்தோடு நம்பி, தன் பாவங்களை அவரிடம் சொல்லி, "ஆண்டவரே, நான் உம்மை முழுமையாக நம்புகிறேன். என் பாவங்களை மன்னியுங்கள்" என ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் வாய்விட்டு சொல்கிறானோ அவனே இந்த ஜெயங்கொண்டவனாகிறான். அவனுக்கே தேவன் இந்த ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பார். அவன் மட்டுமே அந்த ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கத் தகுதி பெறுகிறான். காரணம், அவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காகவே சிலுவையில் இறந்தார் என நம்பி அவரிடம் பாவ மன்னிப்பைக் கேட்டுக்கொண்டதால் தேவனின் கிருபைவரமாகிய நித்திய ஜீவனைப் பெற்று என்றென்றைக்கும் தேவனோடு வாழ்பவனாகிறான். அவனே மரணத்தை ஜெயங்கொண்டவனாவான். அவனே மரணத்திலிருந்து காக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டவனாவான்.

எனவே, ஒரு மனிதன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்படுவதே அவன் பெறும் முதல் ஜெயம் ஆகும். அவ்வாறு, இரட்சிக்கப்பட்ட ஒருவனை நம் ஆண்டவர் இயேசு உயிரோடிருக்கிறவராகையால்

முற்றுமுடிய இரட்சிக்கிறவராயிருக்கிறார் (எபிரேயர் 7:25). அவருடைய கையிலிருந்தும் பிதாவினுடைய கையிலிருந்தும் எவனுமே அவனை பறித்துக்கொள்ள முடியாத அளவுக்கு இரட்டிப்பான பாதுகாவல் அவனுக்கு உண்டு (யோவான் 10:28,29). அது மட்டுமல்ல, பரிசுத்த ஆவியானவராகிய கிறிஸ்துவின் ஆவியானவர் அவனுக்குள்ளே என்றென்றைக்கும் இருக்கிறார் (யோவான் 14:16). நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே (எபிரேயர் 13:5)

இப்படியாக, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசமாயிருப்பதன் மூலம் மரணத்தை ஜெயங்கொண்ட ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும் ஜெயங்கொள்ள வேண்டிய இன்னும் அநேக எதிரிகள் உள்ளன. அவை எவை எனவும் அவற்றை ஜெயங்கொள்வது எப்படி எனவும் இனிவரும் இதழ்களில் காண்போம்.

கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:36-39)

- Bro. S. Varaprasath -

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

மு.ப. 8.15 - ஞாயிறு பாடசாலை

மு.ப. 9.30 - ஆராதனை வேளை

பி.ப 1.30 - வாலிபர் கூட்டம்

பி.ப. 4.00 - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி)

பி.ப. 6.00 - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி)

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

**புதன் கிழமை**

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!



# ஆண்டவரின் அன்பு

## தேவ அன்பின் அனுபவம்

- இரக்கம் என்பது தேவனின் மன்னிக்கும் அன்பு
- கிருபை என்பது தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள நமக்கு தகுதியில்லாத அன்பு
- சமாதானம் என்பது தேவனுடைய ஆறுதல்படுத்தும் அன்பு
- தேவ சித்தம் என்பது தேவனுடைய தவறிழைக்காத அன்பு
- நம் தேவைகளை வழங்குவது தேவனுடைய கரிசனைமிக்க அன்பு
- நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம்பண்ணப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் என்பவை தேவனுடைய நிரூபனமான அன்பு
- பரிசுத்தமாக்குதல் தேவனுடைய நம்மை வளர்க்கும் அன்பு
- பரலோகம் என்பது தேவனுடைய பலன் கொடுக்கும் அன்பு
- நித்தியகாலம் என்பது தேவனுடைய முடிவில்லாத அன்பு

## தேவ அன்பின் விளக்கம்

- அன்பினாலே தேவன் நம்மை தெரிந்தெடுத்தார் (எபேசியர் 1:4,5)
- அன்பினாலே தேவன் நம்மை அழைத்தார் (மத்தேயு 11:28)
- அன்பினாலே தேவன் நமக்குள்ளே வசிக்க வந்தார் (கொலோ 1:27)
- அன்பினாலே தேவன் நம்மைக் கட்டுப்படுத்துகிறார் (எபேசியர் 5:18)
- அன்பினாலே தேவன் நம்மை மாற்றுகிறார் (2 கொரி 3:18)
- அன்பினாலே தேவன் நமக்கு ஆலோசனை கூறுகிறார் (ஏசாயா 9:6)
- அன்பினாலே தேவன் நம்மை ஆறுதல்படுத்துகிறார் (யோவான் 14:1,27)
- அன்பினாலே தேவன் நம்மை எதிர்கொள்கிறார் (யோவான் 16:7)
- அன்பினாலே தேவன் நம்மைத் தாங்குகிறார் (ஏசாயா 63:9)
- அன்பினாலே தேவன் நம்மீது கரிசனை கொள்கிறார் (1 பேதுரு 5:7)

## தேவ அன்பின் வெளிப்பாடு

- இரட்சகர் மீது நாம் கொண்டிருக்கும் அன்பு (யோவான் 21:15)
- வேத வாக்கியங்களின் மீது நாம் கொண்டிருக்கும் அன்பு (சங்கீதம் 119:97)
- தேவனின் பரிசுத்தஸ்தலத்தின் மீது நாம் கொண்டிருக்கும் அன்பு (சங்கீதம் 122:1, எபிரேயர் 10:24,25)
- பரிசுத்தவான்கள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பு (1 யோவான் 4:12)
- பாவிகள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பு (ரோமர் 9:2)

- Bro. Benjamin Devadason -

# அப்போஸ்தலர்களின் மரணங்கள்

- **மத்தேயு:** தூர தேசமான எத்தியோப்பியாவில் வாளால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார்.
- **மாற்கு:** கொடூரமாக வீதி வழியே இழுத்துச் செல்லப்பட்டு, அலெக்ஸாண்ட்ரியாவில் மரித்தார்.
- **லூக்கா:** கலாச்சார நாடாகிய கிரேக்க நாட்டில் ஒலிவ மரத்தில் தூக்கிலிடப்பட்டார்.
- **யோவான்:** அண்டாவில் கொதிக்கும் எண்ணெயில் போடப்படுகையில், அதிசயமான முறையில் தப்பினார். பின்பு பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டார்.
- **செபெதேயுவின் குமாரன் யாக்கோபு:** ஏரோது அரசன் தன் பட்டயத்தினாலே சிரச்சேதம் பண்ணினான் (அப்போஸ்தலர் 12:1,2).
- **அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு:** ஒரு உயர்ந்த தேவாலய உச்சியினின்று தள்ளப்பட்டு, கதையால் அடித்துக் கொல்லப்பட்டார்.
- **பேதுரு:** ரோமாபுரியில் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார்.
- **பர்த்தொலொமேயு (நாத்தான்வேல்):** உயிருடன் தோலுரிக்கப்பட்டார்.
- **அந்திரேயா:** சிலுவையில் கட்டுண்ட நிலையிலும், மரிக்கும்வரை தன்னை துன்பப்படுத்தினவர்களுக்கு பிரசங்கித்தான்.
- **தோமா:** தென்கிழக்கு இந்தியாவில் உடலினூடாக வாளால் உருவப்பட்டு இறந்தார்.
- **யூதா:** அம்புகளால் உடல் துளைக்கப்பட்டு, இறந்தார்.
- **மத்தியா:** கல்லெறியப்பட்டு, பின்பு சிரச்சேதம் பண்ணப்பட்டார்.
- **பவுல்:** பல சித்திரவதைகளுக்கு பின்பு, ரோமாபுரியில் பேரரசன் நீரோவினால் சிரச்சேதம் பண்ணப்பட்டார்.

**கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. (சங்கீதம் 116:15)**



# உன் பெயர் என்ன?

வயது முதிர்ந்த ஓர் தகப்பன். அவன் பெற்ற இரட்டைக் குழந்தைகள். ஒவ்வொன்றும் ஒரு விதம். வேட்டை-யாடும் முரட்டுத்தனமான ஒருவன். ஆடுகளை மேய்க்கும் பக்குவம் கொண்ட மற்றவன். ஏசா, யாக்கோபு அவர்கள் பெயர்களாகும். அவர்களது தகப்பன் ஈசாக்கு கண் பார்வையை இழந்தார் வயதின் காரணமாய்.

ஈசாக்கு எனும் அந்த வயோதிப தகப்பனார் தன் மூத்த மகனாகிய ஏசா மீது அதிக பற்று கொண்டிருந்தார். காரணம், அவன் வேட்டையாடி, சமைத்-துக் கொண்டு வருபவை அவரின் நாவுக்கு சுவையாயிருந்தமையால் ஆகும்.

ஓர் நாள், தகப்பன் தான் அதி-கமாய் நேசித்த தன் மூத்த மகன் ஏசாவை ஆசீர்வதிக்க எண்ணினான். ஆகவே, அவன் ஏசாவை அழைத்து அவனை நோக்கி: “எனக்காக வேட்டை-யாடி, அதை எனக்குப் பிரியமாய் இருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாக சமைத்து, நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்-தில் கொண்டுவா” என்றான். ஏசாவும் வேட்டையாடிக் கொண்டு வரும்படி வனத்துக்குப் போனான்.

ஏசாவுக்கு ஆசீர்வாதம் கிடைக்க இருப்பதை அறிந்து கொண்ட ரெபெக்-காள் எனும் அவனின் தாய் அந்த ஆசீர்வாதத்தை எப்படியாவது தான் அதிகமாய் நேசிக்கும் இளைய குமார-னாகிய யாக்கோபுக்கு பெற்றுக்-கொடுக்க வேண்டும் என எண்ணினாள். அதற்காக, யாக்கோபுக்கு ஏசாவின் உடைகளை உடுத்துவித்து அவனை ஏசாவைப் போல நடிக்கப்பழக்கினாள்.

கண் பார்வை மங்கிய வயோதிப தகப்பனிடம் வந்தான் தன் தாய் சமைத்த உணவைக் கையிலேந்தி, தன் தமையன் உடைகளை உடுத்திய இளைய மகன் யாக்கோபு.

அவன் தன் தகப்பனிடத்தில் வந்து, என் தகப்பனே என்றான். அதற்கு அவன்: இதோ, இருக்கிறேன்; நீ யார், என் மகனே என்றான். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனை நோக்கி: நான் உமது மூத்த மகனாகிய ஏசா.

அந்தோ பரிதாபம்! பல கேள்வி-கள் கேட்டும், முகர்தல், தடவிப்பார்த்-தல் என பல விதமாக சோதித்துப் பார்த்தும் கூட, கண் பார்வையில்லாத தகப்பனால் தன் முன் இருப்பவன் மூத்த மகன் ஏசா அல்ல, தன்னை ஏமாற்ற வந்திருக்கும் இளைய மகன் யாக்கோபு தான் என அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போயிற்று.

இறுதியில், “சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசாவின் கைகள்”

என்று சொல்லி, இன்னான் என்று அறியாமல், அவனை ஆசீர்வதித்தான். யாக்கோபு தன் தமையனின் பெயரை தன் பெயர் எனக்கூறி தகப்பனிடம் இருந்து ஆசீர்வாதத்தைத் திருடிக்-கொண்டான்.

அதன் பின்னர், வீடு திரும்பிய ஏசா தான் ஏமாற்றப்பட்டதை அறிந்து தன்னைக் கொன்று விடுவான் என பயந்து, வேற்றூருக்கு தப்பியோடி இருபதற்கும் அதிகமான வருடங்களை அங்கே கழித்து மனைவிகள், பிள்ளைகள் மற்றும் அநேக மிருக உடைமைகள் கொண்ட மகா செல்வந்தனானான். இப்படியாக பிறப்-பிலிருந்தே கபட வாழ்க்கை வாழ்ந்த யாக்கோபுவை சந்தித்தார் தேவன் ஓர் தேவ தூதனின் வடிவில்.

இரவிலே பொழுது விடியும் வரை அந்த தேவ தூதனோடு போராடிய யாக்கோபு, அந்த தேவ தூதன் போகப்புறப்படும் வேளையில் அவரிடம் இருந்தும் எப்படியாவது ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆவல் கொண்டான்.

ஆசீர்வாதத்தை மட்டுமே குறிக்-கோளாய்க் கொண்டு வாழ்ந்து வந்த யாக்கோபு அந்த தேவ தூதனைப் போகவிடாமல் “நீர் என்னை ஆசீர்வதித்-தாலொழிய உம்மைப் போகவிடேன்“ என்றான். அப்பொழுது அவனை ஆசீர்வதிப்பதற்கு பதிலாக அவனிடம் ஓர் கேள்வியைக் கேட்கிறார். “உன் பேர் என்ன?” ஆம். இருபது வருடங்-களுக்கு முன்பு தன் தமையனின் பெயரைத் தன் பெயர் எனத் தன் தகப்பனிடம சொல்லி தன் தகப்பனை ஏமாற்றிய அதே யாக்கோபு இப்போது தன் உண்மையான பெயரைச் சொல்ல நிர்ப்பந்திக்கப்பட்டான். அன்று தன் தகப்பனை ஏமாற்றிய யாக்கோபுவுக்கு இன்று தேவனை ஏமாற்ற முடிய-வில்லை. அவன் தேவனிடம் தோற்றுப் போனான். அதுவே அவன் தன் வாழ்வில் பெற்ற மிகப்பெரிய வெற்றியாகும்.

அன்று, கர்த்தர்: “உன் பெயர் என்ன?” என்று கேட்டதற்கு தன் பெயர் யாக்கோபு என ஏற்றுக்கொண்டான். அப்பொழுது அவர்: “உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்” என்றார். அந்த இஸ்ரவேல் என்னும் பெயரால் இன்று உலக நாடுகள் அனைத்தின் கவனத்தையும் ஈர்த்த, அனைத்து உலக நாடுகளும் கண்டு அஞ்சும் ஓர் நாட்டையே தேவன் உருவாக்கியுள்ளார்.

நாம் இவ்வுலகில் என்னவெல்லாம் ஆட்டம்போட்டாலும், யாரையெல்லாம் ஏமாற்றினாலும் நமது கைவண்ணம் எதுவும் தேவனிடம் செல்லுபடியாகாது. எல்லாவற்றையும் அறிந்திருக்கிற தேவனை ஏமாற்ற நம்மால் இயலாது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயும் இருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (எபிரேயர் 4:13).



# இயேசு கிறிஸ்துவினால் குணமாக்கப்பட்டவர்கள்

1. ராஜாவின் மனுஷரில் ஒருவனின் மகன் (யோவான் 4:46)

2. பெதஸ்தா குளமருகில் 38 வருடங்களாக வியாதியாயிருந்தவன் (யோவான் 5:1-9)

3. பேதுருவின் மாமி (மத்தேயு 8:14-17)

4. மலைப்பிரசங்கத்தின் பின்பு மலைக்குக் கீழேயிருந்த குஷ்டரோகி (மத்தேயு 8:2-4)

5. நான்கு நண்பர்களால் படுக்கையோடே சுமந்துவரப்பட்ட திமிர்வாதக்காரன் (மத்தேயு 9:2-8)

6. சூம்பின கையையுடையவன் (மத்தேயு 12:9-14)

7. நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனாயிருந்த திமிர்வாதக்காரன் (மத்தேயு 8:5-13)

8. இயேசுவுக்கு பின்னே கூப்பிட்டுக்கொண்டு சென்ற இரு குருடர்கள் (மத்தேயு 9:27-31)

9. பிசாசுபிடித்த ஊமையன் (மத்தேயு 9:32,33)

10. பெத்சாயிதா ஊர்க்குருடன் (மாற்கு 8:22-26)

11. பிறவிக்குருடன் (யோவான் 9)

12. 18 வருடங்களாக கூனாயிருந்த பெண் (லூக்கா 13:10-17)

13. 12 வருடங்களாக பெரும்பாடுள்ள பெண் (மத்தேயு 9:20-22)

14. நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் (லூக்கா 14:1-6)

15. குஷ்டரோகிகள் 10 பேர் (லூக்கா 17:12-19)

16. வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர் (மத்தேயு 20:29-34)

17. மல்குஸ் (லூக்கா 22:50-51)

- Sis. Sivapackiyam -

# பின்பு,

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேயின் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். **பின்பு** எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ, அவர்கள் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்துக்கும், பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள்.
(யாத்திராகமம் 35:20,21)

ஆண்டவருடைய வாசஸ்தலத்தை கட்டுவதற்கு அவசியமான திரவியங்களின் நீண்ட பட்டியலை மோசே கூறி முடிக்க சபையார் எல்லாரும் மோசேயின் சமுகத்தை விட்டு புறப்பட்டு தங்களுடைய வதிவிடங்களுக்கு திரும்பிவிட்டார்கள். சரியாக, நாம் சபையில் பிரசங்கங்களை கேட்டுவிட்டு வீடு திரும்புவது போல.

ஆனால், அதன் பின்பு என்ன நடந்தது என்பதே முக்கியம்.

மத்தேயு 13ம் அதிகாரத்தில் உள்ள விதைப்பவன் உவமையில் ஆண்டவர் சொன்ன நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் பலன் கொடுத்தமைக்கு காரணம் இதுவே.

லேவியராகமம் 11ம் அதிகாரத்தில் அசைபோடாதவை அருவருப்பானவை என எழுதப்பட்டிருப்பதற்கு காரணமும் இதுவே.

இதையே தான் யாக்கோபும் தன் நிருபத்தல் 1ம் அதிகாரத்தில் "அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான்." என கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்கிற மனுஷனை உருவகப்படுத்தி திருவசனத்தைக் கேட்டும் அதின் படி செய்யாதவனைக்குறித்துக் கூறுகிறார்.
ஆம், அருமையானவர்களே, அன்று இஸ்ரவேல் சபையார் எல்லாரும் மோசேயின் சமுகத்தைவிட்டு புறப்பட்டு சென்ற பின்பு அவர்கள் இருதயம் அவர்களை எழுப்பியது, அவர்கள் ஆவி அவர்களை உற்சாகப்படுத்தியது.

நம் வாழ்க்கையிலும் நாம் கேட்கும், தேவனுடைய வார்த்தை பலன் தர வேண்டுமாயின் நாமும் அவ்வார்த்தைகளை மறவாமல் அவற்றை நம் இருதயத்தில் வைத்து அவற்றை நன்கு தியானித்து நம்மை மாற்றுவதற்கு நாம் இடங்கொடுக்க வேண்டும்.

நான் மாறத் தேவையில்லை என நாம் நினைப்பதோ அல்லது தேவனே நான் இப்படியே இருந்து கொள்கிறேன் நீர் என்னை மாற்ற விரும்பினால் மாற்றிக் கொள்ளும் என சொல்வதோ தவறாகும். இதனால் எவ்விதப்பயனுமில்லை.

தேவன் நம்மை அழைத்திருப்பது அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக நம்மை மாற்றுவதற்காகவே. (ரோமர் 8:29)

நாம் ஆண்டவர் இயேசுவிடம் மன்னிப்புக்கேட்டு அவரை ஏற்றுக்கொண்டு அவரால் இரட்சிக்கப்பட்டவர்களாயிருக்கலாம். ஆனால், நாம் இவ்வுலகில் வாழுமளவும் தேவன் நம்மை மாற்றிக்கொண்டு தான் இருக்கிறார்.

ஆனால், நம்மை மாற்றுவதற்கு நாம் எந்த அளவுக்கு இடங்கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு தான் தேவன் நம்மை மாற்றுவார்.

ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்கு உரிய பாத்திரமாயிருப்பான். என பவுல் 2 தீமோத்தேயு 2: 21ல் தீமோத்தேயுவுக்கு கூறுகிறார்.

எனவே, ஓர் பிரசங்கத்தைக் கேட்ட பின்பு, யாதொருவர் மூலம் வேதத்தின் அடிப்படையிலான புத்திமதியைக் கேட்ட பின்பு, வேதத்தை வாசித்த பின்பு, நாம் அவ்வசனத்தின் படி நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். இப்படியாக நாம் மாற்றப்படுவதன் மூலம் தான் நாம் தேவனுடைய சாயலாகிறோம்.

காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாய் இருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள் என எபிரேயர் 5:12 எழுதப்பட்டுள்ளது.

காலங்கள் பல கடந்து நாம் நம் வாழ்வில் கிறிஸ்தவ முறைகளை நன்கு அறிந்து கிறிஸ்வத மதத்தானாய் வாழ அறிந்து கொண்டோம். ஆனால், கிறிஸ்துவுக்கு ஏற்றவனாய் வாழ நாம் பழகிக்கொள்ள வேண்டும். அதற்கு தேவனுடைய வார்த்தையை கேட்பவர்களாய் மாத்திரமல்ல, கேட்ட பின்பு அதின் படி செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும். இல்லையென்றால் எரேமியா 8:20லே எழுதப்பட்டுள்ளது போல "அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை" எனும் வார்த்தை நமக்கு பொருத்தமாகிவிடும்.

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ..........................................................................


**முகவரி:** ..........................................................................

..........................................................................

..........................................................................

**ஒப்பம்:** ..........................................................................

# ஜீவ ஒளி



Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901
www.christianfellowshipcentre.com

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.